06.09.2024

DVOP 23/2022 மனுதாரர். சாட்சி. 1 பிரைந்தி , க/பெ. நிஷாந்த்

மனுதாரர் ஆஜர் சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கும் எதிர் மனுதாரரருக்கும் நடந்த திருமணம் காதல் மற்றும் பெற்றோர்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்திற்கு பின்னிட்டு கடலூரில் திருமண வரவேற்புக்கு ரூ. 1000000 செலவு செய்திருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமண வரவேற்பின் போது அரசியல் கட்சி பிரமுகர்கள் , அமைச்சர்கள், அரசு உயர் பதிவியில் இருப்பவர்கள் வருகை புரிந்தனர் என்றால் அப்போது வரவில்லை அதன்பின்னிட்டு வீட்டிற்கு வந்தார்கள். அன்றைய காலகட்டத்திலேயே ரூ.1000000 செலவு செய்து திருமண வரவேற்பு நடத்தினார்கள் என்றும் அப்போது முக்கிய பிரமுகர்கள் வந்தார்கள் என்றும் அது பற்றி எனக்கு தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் M.B.A படித்துள்ளேன். அது இருபாலர் படிக்கும் கல்லூரி. நான் M.B.A படித்துள்ளதால் ஆண்ட்ராய்டு போன், டச் போன் ஆகியவற்றை இயக்க தெரியும் என்றால் சரிதான். பழைய E.Mail ID braiyandhi@gmail.com . 2020 அக்டோபருக்கு பின்னிட்டு braiyandhi1427@gmail.com என்ற இமெயிலை இன்றைய தேதி வரை பயன்படுத்திவருகிறேன். மேற்படி இமெயிலுக்கு பாஸ்வேட் என்னுடைய செல்போன் எண் 9003614565 என்ற எண்ணுக்கு தான் வரும் என்றால் சரிதான். மேற்படி இமெயிலிருந்து என்னை தவிர வேறு நபர்கள் பிற நபர்களுக்கு மெயில் அனுப்ப முடியாது என்றால் எனது கணவருக்கு பாஸ்வேட் தெரியும் என்பதால் அவர் அனுப்புவார். 2020 ஜுன் 4 ம் தேதியிலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

2. நான் 2020 ஜுன் மாதத்தில் இருந்து பிரிந்து வாழ்ந்து வருவதால் 2020 அக்டோபர் மாதம் துவங்கப்பட்ட மேற்படி இமெயிலின் பாஸ்வேட் எனது கணவருக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் 1ம் எதிர் மனுதாரர் ஹேக் செய்து விடுவார். பாதுகாக்கப்பட்ட சிறப்பு அம்சம் என்பதால் மூன்றாவது நபர் ஹேக் செய்ய முடியாது என்றும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரேம் இன்ஜினியரிங் கம்பேனியில் 150 பேர் பணியாற்றி வரும் நிலையில் 1ம் எதிர் மனுதாரர்

வேறு நிறுவனத்திற்கு வேலைக்கு செல்ல வேண்டியஅவசியமில்லை என்றால் அவர் தொழில் செய்ய அனுபவத்திற்காக வேறு நிறுவனத்திற்கு வேலைக்கு செல்கிறார். நான் சொல்வது போல் வேறு எங்கும் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ள 1ம் எதிர் மனுதாரரின் விஸ்டிங்கார்டை யார் வேண்டுமானாலும் தயார் செய்யலாம் என்றால் அது 1ம் எதிர் மனுதாரர் உடையது தான். அது வழக்கிற்காக ஒப்புதல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. எனக்கு பிரசவத்தின் போது ஏற்பட்ட ரூ.45000 செலவு தொகையை 1ம் எதிர் மனுதாரர் திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு சேரவேண்டிய பொருட்களை 1ம் எதிர் மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் இன்னும் எல்லா பொருட்களையும் கொடுக்கவில்லை. நான் அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொண்டதற்கு குறிப்புரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி குறிப்புரையில் பீரோ, மெத்தை, வெள்ளி குங்குமச்சிமில் , வெங்களம் முக்காலி ஆகியவை எனக்கு வரவில்லை என குறிப்பிட்டு கூறியுள்ளேன். எனக்கு சேரவேண்டிய பொருட்களை நான் கடலூரில் கடந்து 11.09.2022ம் தேதியே பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக உறுதிமொழிபத்திரம் சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்து மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கையெழுத்து போடும் போது மீதமுள்ள பொருட்களை அனுப்பிவிடுவதாக கூறிவிட்டு இது வரை அனுப்பவில்லை. மேற்படி நான்கு பொருட்களை தவிர வேறு பொருட்களை 1ம் எதிர் மனுதாரரிடம் இல்லை என்றால் சரிதான். எனது பெற்றோரின் குடும்ப அட்டையிலிருந்து எனக்கு திருமணமானதால் ரேசன் கடையில் பணிபுரியும் நபர்களே எனது பெயரை நீக்கிவிட்டார்கள். 1ம் எதிர் மனுதாரர் குடும்பத்தாரின் குடும்ப அட்டையில் உங்கள் பெயரை சேர்ப்பதற்கு இது நாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வழக்கிற்காக நான் பொய்யாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல 1ம் எதிர் மனுதாரரின் குடும்பத்தில் எனது பெயரை சேர்க்க நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. எனது கணவர் என்னை செருப்பால் இடது தோள்பட்டையில் அடித்தற்கு இன்று வரை பழனியில் மருத்துவர் பார்த்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான்

மருத்துவம் பார்த்தது உண்மை தான் ஆனால் அதற்கான ஆவணம் ஏதுமில்லை. 2016 ஆண்டு முதல் 2022ம் ஆண்டு மே மாதம் வரை எதிர் மனுதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் என்னை வரதட்சணை கொடுமை படுத்தினார்கள் என காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் புகார் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு அப்போது இல்லை. ரூபேஷ் , அசோக், சிவசுப்பிரமணியன் ஆகியோர்கள் என்னுடைய கல்லூரி நண்பர்கள் என்றால் சரிதான். கார்த்திக் சிவராமன் எனது பேஷ்புக் நண்பர் என்றால் இல்லை. 9952509851 என்பது கார்த்திக் சிவராமன் போன் நம்பர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடலூர் காவல் நிலையத்தில் 16.05.2022ம் தேதியும், பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 18.05.2022ம் தேதியும் எதிர் மனுதாரர் மீது புகார் கொடுத்தேன். மேற்படி புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் 1ம் எதிர்மனுதாரருக்கும், எனக்கும் விவாகரத்து ஆனதற்கு உத்தரவு இருந்ததால் நடவடிக்கை எடுக்க முடியாது என கூறிவிட்டார்கள்.

5. மேற்படி இரண்டு காவல் நிலையத்தாரும் விசாரணை செய்ததில் எனது புகாரில் உண்மை இல்லாததால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மாவட்ட சமூக நல அலுவலரிடம் மன ரீதியான துன்புறுத்தலுக்கு 5000000 இழப்பீடு கேட்டிருந்தேன் என்றால் சரியல்ல. தற்போது எனது நிரூபண வாக்குமூலத்தில் 7500000 கேட்டுள்ளேன் என்றால் தற்போது மன உளைச்சல் அதிகமாகிவிட்டதால் சேர்த்து கேட்டுள்ளேன். 2020ம் ஜூன் மாதம் 4ம் தேதி எனது பெற்றோர் வீட்டுக்கு வந்த பின்பு 3 மாதங்கள் எனது மகளுடன் வீடியோ காலில் பேசிக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். 2020க்கு பின்னிட்டு 2022ல் தான் எனது மகளுடன் நான் பேசுவதற்கு நடவடிக்கை எடுத்தேன் என்றால் அந்த இடைபட்ட காலத்தில் எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் உடல் நிலை சரியில்லாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. எனக்கு கர்ப்பபையில் தொற்று இருந்ததால் மருத்துவம் பார்த்து வந்தேன். அதே போல் தந்தைக்கு அறுவை சிகிச்சை செய்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. கடலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 14.05.2022ம் தேதி கொடுத்த புகாரில் எனது குழந்தையை என்னிடம் விட்டுத்தர வேண்டும் என்று தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் குடும்பத்தார் என்னை வரதட்சணை கேட்டு கொடுமை படுத்துகிறார்கள் என்று புகார் கொடுக்கவில்லை என்றால் முதலில்

எனது குழந்தையை கேட்டு தான் புகார் கொடுத்தேன். மனுவில் சொல்வது போல் எனது கணவர் குடும்பத்தார் என்னை வரதட்சணை கொடுமை மற்றும் சித்ரவதை செய்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கடலூர் குடும்ப நல நீதிமன்றத்தில் எனது கணவர் விவாகரத்து கேட்டு மனு செய்தததில் கடந்த 12.02.2021ம் தேதி விவாகரத்து செய்து ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. தற்சமயம் மேற்படி மனுவில் ஒரு தலை பட்ச உத்தரவை ரத்து செய்ய மனு செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதே போல் பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் எனது குழந்தையை எனது வசம் ஒப்படைக்க மனு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் எனது குழந்தையை பாதுகாத்து பராமரித்து வளர்ப்பதற்கு போதுமான வருமானமும் வசதிவாய்ப்புகளும் எனக்கும், எனது பெற்றோருக்கும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் இங்கு தாக்கல் செய்துள்ள மனுவில் நான் எனது தகப்பனார் வீட்டில் தங்கியிருந்து கஷ்ட ஜீவனம் செய்து வசித்து வருகிறேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தற்சமயம் நான் டியூசன் எடுத்து வருகிறேன். ஒவ்வொரு மனுவிலும் முன்னுக்கு பின் முரணாக சங்கதிகளை கூறி பொய்யாக வழக்குகளை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இம்மனு தாக்கல் செய்யும் சமயத்தில் எனக்கும், 1ம் எதிர் மனுதாரருக்கும் விவாகரத்து ஆனதால் இந்த மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் மூலம் ஒரு தலை பட்ச விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரிந்த பின்பு தான் மனு தாக்கல் செய்தேன்.

( எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.09.06 10:46:14 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**